OS 58/2020

பி.வா.சா.2- திருமதி. சாந்தி க/பெ. பூபதி

நாள்: 10.09.2025

**4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் ஆகாரம் கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்தை யார் வாங்கியது என்றால் நானும், எனது கணவரும் வாங்கினோம். யாரிடம் இருந்து வாங்கினோம் என்றால் ஆதிமூலம் என்பவரிடம் இருந்து வாங்கினோம். எவ்வளவு சொத்து என்றால் 2 ஏக்கர் ஆகும். வழக்கு சொத்து வாங்கும்போது கிணறு, பம்புசெட்டுடன் இருந்தது என்றால் சரிதான். வழக்கு சொத்தை தற்போது நாங்கள் தற்போது அனுபவம் செய்கிறோமா என்றால் இல்லை. வழக்கு சொத்தை இளங்கோ என்பவருக்கு விற்பனை செய்துவிட்டோம். எவ்வளவு தொகைக்கு விற்பனை செய்தோம் என்றால் நியாபகம் இல்லை. எதற்காக விற்பனை செய்தோம் என்றால் கடனை அடைப்பதற்காக விற்பனை செய்தோம்.

2. எங்களிடம் கிரையம் வாங்கிய இளங்கோ தற்போது அனுபவம் செய்கிறாரா என்றால் அவர் விற்பனை செய்துவிட்டார். யாருக்கு விற்பனை செய்தார் என்றால் விவரம் எனக்கு தெரியுமா என்றால், தட்சினாமூர்த்தி என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார். வழக்கு சொத்தை வாங்குவதற்கு எங்களுக்கு எவ்வாறு வருமானம் வந்தது என்றால் நானும், எனது கணவரும் விவசாயம் மற்றும் வண்டிமாடு ஓட்டி சம்பாதித்தோம். வழக்கு சொத்தை நாங்களும், எனது மகனும் சேர்ந்து வாங்கினோமா என்றால் இல்லை. நாங்கள் சொத்தை இளங்கோவிற்கு விற்பனை செய்த விவரம் எனது மகனுக்கு தெரியுமா என்றால் அப்போதே தெரியும். வழக்கு சொத்தில் எங்களுக்கோ, எனது மகனுக்கோ எந்த உரிமையும் இல்லை என்றால் நாங்கள் தூண்டுதல் செய்ததன் பேரில் தான் எனது மகன் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை. வாதியும், நாங்களும் சேர்ந்து தட்சினாமூர்த்தியிடம் இருந்து சொத்தை அபகரிக்கவேண்டி வாதி மூலம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.